கழக மறுசீரமைப்பு

# தலைமைக் கழகப் பிரதிநிதிகள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

**சென்னை, செப்.02–**

**கழக மறுசீரமைப்பு பிரதிநிதிகள் குறித்து நேற்று முன்தினம் (31.08.2026) தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:**

கழக தலைமைச் செயற்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின்படி, கழகத் தலைவர் அவர்கள் 110 கழக மாவட்டங்களை அறிவித்துள்ளார்.

கழக சீரமைப்புக்குழு வகுத்துத் தந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்ட - கிளைக் கழகங்களை மறுசீரமைத்து, தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியை நேரடியாக மேற்பார்வையிடுவதற்காக ஒரு வருவாய் மாவட்டத்திற்கு இருவர் வீதம் 76 தலைமைக் கழகப் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் நடத்தும் மாவட்டச் செயற்குழு கூட்டங்கள் அனைத்தும் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும். பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்ட - கிளைக் கழகங்கள் மறுசீரமைப்பில் ஏதேனும் கருத்துகள், மாறுபாடுகள் இருப்பின் கழகத்தினர் தமது மாவட்டத்திற்குரிய தலைமைக் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கலாம்.

**தலைமைக் கழகப் பிரதிநிதிகளுடன் கழகத் தலைவர் இன்று ஆலோசனை!**

தலைமைக் கழகப் பிரதிநிதிகளுடன், இன்று புதன்கிழமை (செப்டம்பர் 02, 2026) கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் மாலை 5 மணியளவில் காணொலிக் கூட்டம் நடைபெறும். மாவட்டச் செயற்குழுக் கூட்டம் சட்டப்பேரவை நடைபெறாத நாட்களில் நடத்தும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | மாவட்டம் | தலைமைக் கழக பிரதிநிதிகள் |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் | திரு. அன்னியூர் சிவா |
| | | திரு. ப. அப்துல் மாலிக் |
| 2 | சென்னை | திரு. பேரா. ஜெ. காண்ஸ்டண்டைன் ரவீந்திரன் எம்.பி. |
| | | திரு. ஆஸ்டின் எம்.எல்.ஏ |
| 3 | செங்கல்பட்டு | திரு. அண்ணாதுரை எம்.பி |
| | | திரு. கோவி.லெனின் |
| 4 | காஞ்சிபுரம் | திரு. என். மருது கணேஷ் |
| | | திருமதி. கே. ராணி ரவிச்சந்திரன் |
| 5 | ராணிப்பேட்டை | திரு. டி.செங்குட்டுவன் |
| | | வழக்கறிஞர் திரு. அ. சரவணன் |
| 6 | வேலூர் | திரு. இ.கருணாநிதி |
| | | திரு. ப. தாயகம் கவி |
| 7 | திருப்பத்தூர் | திரு. வே. கௌதமன் |
| | | வி.மு.விஜய கதிரவன் |
| 8 | திருவண்ணாமலை | திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் |
| | | டாக்டர் பி.எம். யாழினி |
| 9 | விழுப்புரம் | புதுச்சேரி திரு. சிவா |
| | | திருமதி. ஜெ.வீரமணி |
| 10 | கள்ளக்குறிச்சி | திரு .ஆர். டி.அரசு |
| | | திரு. கே.பி.சங்கர் |
| 11 | கிருஷ்ணகிரி | திரு. ஆ.கிருஷ்ணசாமி |
| | | திருமதி.நாமக்கல் ப. ராணி |
| 12 | தருமபுரி | திரு. பார் இளங்கோவன் |
| | | திரு. ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., |
| 13 | சேலம் | திரு. இரா. கிரிராஜன் |
| | | திரு. அழகிரி சதாசிவம் |
| 14 | நாமக்கல் | டாக்டர் ஆர். கோகுல்கிருபாசங்கர் |
| | | திரு. திருப்பத்தூர் நல்லதம்பி |
| 15 | ஈரோடு | திரு. சபாபதி மோகன் |
| | | திரு. உடுமலை ஜெயகுமார் எம்.எல்.ஏ., |
| 16 | திருப்பூர் | திரு. கே.ஈ.பிரகாஷ் |
| | | திரு. இசை |
| 17 | நீலகிரி | வழக்கறிஞர் திரு. இரா. ராஜீவ்காந்தி |
| | | திரு. வி.சி.சந்திரகுமார் |
| 18 | கோயமுத்தூர் | திரு. எஸ்.ஆர்.பார்த்திபன் |
| | | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| 19 | கரூர் | திரு. தி.அ. முகம்மது சகி |
| | | திரு. பெரம்பலூர் பிரபாகரன் |
| 20 | திருச்சிராப்பள்ளி | திரு. வ.வேலுசாமி |
| | | திரு. வேடசந்தூர் சாமிநாதன் எம்.எல்.ஏ., |
| 21 | பெரம்பலூர் | திருமதி. அஞ்சுகம் பூபதி |
| | | திரு. முத்துவேல் ராமசாமி |
| 22 | அரியலூர் | திரு. சபா ராஜேந்திரன் |
| | | திரு. அம்பேத்குமார் எம்.எல்.ஏ., |
| 23 | கடலூர் | திரு. கலாநிதி வீராசாமி எம்.பி., |
| | | திரு. பரிதி இளம்சுருதி |
| 24 | மயிலாடுதுறை | திரு. கோவி.செழியன் |
| | | திரு. துரை கி சரவணன் |
| 25 | நாகப்பட்டினம் | திரு. பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ., |
| | | திரு. இளமகிழன் |
| 26 | தஞ்சாவூர் | திரு. ஜி.பி.ராஜா |
| | | திருமதி. மாலதி நாராயணசாமி |
| 27 | திருவாரூர் | திரு. இள.புகழேந்தி |
| | | திரு. தமிழன் பிரசன்னா |
| 28 | புதுக்கோட்டை | திரு. ஏ.கே.எஸ்.விஜயன் |
| | | திரு. மதுரை பாலா |
| 29 | திண்டுக்கல் | திரு. செல்வம் எம்.பி |
| | | திரு. பிரபு கஜேந்திரன் |
| 30 | சிவகங்கை | திரு. இளையராஜா (இளைஞரணி) |
| | | திரு. தங்கபாண்டியன் (ராஜபாளையம்) |
| 31 | மதுரை | பி.டி.சி. செல்வராஜ் |
| | | வழக்கறிஞர் திரு. ரவீந்திரன் |
| 32 | தேனி | திரு. சுபா சந்திரசேகர் |
| | | டாக்டர் ஏ. கே. தருண் விஸ்வநாதன் |
| 33 | விருதுநகர் | திரு. கலை கதிரவன் எம்.எல்.ஏ., |
| | | திரு. இன்பா ரகு |
| 34 | இராமநாதபுரம் | திருமதி. ஹெலன் டேவிட்சன் |
| | | திரு. ஜெகன் பெரியசாமி |
| 35 | தூத்துக்குடி | திரு. நல்ல சேதுபதி |
| | | திரு. தாமரைபாரதி |
| 36 | திருநெல்வேலி | திரு. முத்துராஜா எம்.எல்.ஏ., |
| | | திரு. ஜோயல் |
| 37 | தென்காசி | திரு. ஞானதிரவியம் |
| | | திரு. வ.து.ந.ஆனந்த் |
| 38 | கன்னியாகுமரி | திரு. மார்கண்டேயன் எம்.எல்.ஏ., |
| | | திரு. மாலைராஜா |

இவ்வாறு தலைமைக்கழகம் அறிவித்துள்ளது.

திருவண்ணாமலை – தி.மு.க. மாணவர் அணி சார்பில்

## மாணவி அனிதாவின் நினைவேந்தல்!

### சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி – டாக்டர் எ,வ,வே,கம்பன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, செப்.2-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், நீட் தேர்வுக்கு பலியான மாணவி அனிதாவின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உட்பட கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

01.09.2026, செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் சாலை, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், திமுக மாணவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு பலியான மாணவி அனிதாவின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நினைவேந்தலுக்கு தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் காலேஜ் கு.ரவி தலைமை வகித்தார்.

ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர்.சந்திரன், பா.ராமஜெயம், பகுதி செயலாளர்கள் ந.சீனுவாசன், அ. கோவிந்தன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.க.கௌதமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நினைவேந்தலில் கலந்து கொண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஶ்ரீதரன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம். மாவட்ட துணை செயலாளர் ப்ரியா.விஜயரங்கன், மாநில தொ.மு.ச. செயலாளர் க.சௌந்தரராசன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் மாநில அமைப்புசாரா தொ.மு.ச. ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, கற்பகம் சரவணன், பி.கே. ஏ.அருண், பொதுக்குழு உறுப்பினர் மோட்டூர்பாலு, மாவட்ட பிரதிநிதி இல. குணசேகரன் மாநகர இளைஞர் அணி மண்டி.பிரகாஷ், சச்சின் சபரி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, டி.பென்ராபர்ட், டி.எம்.வெங்கடேசன், ஆர். வெங்கடேஷ், அண்ணா நகர் ஜாகீர், தமிழ்மாணவர் மன்றம் பரணி, பா.தீபன், மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



திருவண்ணாமலை தி.மு.க. மாணவர் அணி சார்பில் 'நீட்' தேர்வுக்கு பலியான மாணவி அனிதாவின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் உட்பட கழக முன்னோடிகள் கலந்துகொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் இரா.ஶ்ரீதரன், மு.பெ.கிரி, ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், காலேஜ்ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், மெய்யூர்செந்திரன், ந.சீனுவாசன், கற்பகம் சரவணன், இல.குணசேகரன் உட்பட பலர் உள்ளனர்.